விலை சதம் 10.


# சுதந்திரன்

SUTANTIRAN

வ- ஆ. 2001, வைகாசி 5 உ செவ்வாய் (19-5-70) ந. அவ்வல் பிறை 12 —புத்தகம் 24 இதழ் 41

## தமிழரசு சாதனை இதோ!

கருத்துக்குருடர்களே பாருங்கள்!



தமிழரசுக்கட்சி பெரிதாக எதைச் சாதித்துவிட்டது என்று சிலர் கேட்கிருர்கள். மேலே காணப்படும் பற்றுச் சீட்டைப் பாருங்கள்—இந்தக் கேள்விக்கு விடைகிடைக்கும். மேலே காணப்படும் தமிழ் பற்றுச்சீட்டு கொழும்பிலுள்ள அஞ்சலகம் ஒன்றினல் கொழும்பு தமிழணிச் சபையினருக்குவழங்கப்பட்ட பதிவு அஞ்சலுக்கான பற்றுச்சீட்டாகும் அதுவும் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தின் பற்றுச் சீட்டு தமிழில் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழரசாரின் முயற்சியினல் 1966 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழ் மொழிச் சட்ட விதிகளின் படி தமிழும் அரசாங்க அலுவலகங்களில் ஒரு நிர்வாக மொழியாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அச் சட்ட விதிகள் செம்மையாக அமுல் நடத்தப்பட்டால் தமிழுக்கு கௌரவமான இடம் அரசாங்க நிர்வாகத்தில்கிடைக்கும் என்பதுபுரிகிறதல்லவா? சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற நிலையை அழித்துவிட்டதல்லவா தமிழ்மொழிச் சட்ட விதிகள்! இது தமிழரசாரின் மகத்தான சாதனையல்லவா?

# உடுகமை புகழ்பாடிய உதவாத்தமிழர் துரையப்பா

(நமது விசேஷ நிருபர்)

''யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் மானத்தை பலமுறை காற்றில் பறக்கவிட்டவர் துரையப்பா. இனக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் சிங்களக் காடையர்கள் தமிழர்களை அடித்தார்கள் உதைத்தார்கள் கொன்ருர்கள்—தமிழரை உயிரோடு தீவைத்துக் கொழுத்திஞர்கள். அந்த நேரத்தில் வெந்து துடித்து தமிழினம் வேதனைக்கண்ணீர் வடித்தபோது ஈழத்தின் இராணுவம் வேறு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினற்போல் வீதி வீதியாக மேலும் தமிழர்களைச் சுட்டுக்குவித்தது! அந்த நேரத்தில் இராணுவ தளபதியாக இருந்த உடுகம அவர்களைப் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக "He is really doing a good job" "அவர் உண்மையிலேயே நல்ல வேலை செய்கிருர்" என்று பாராட்டியவர் அல்பிரட் துரையப்பா!''

## சிங்களத் தளபதிக்கு சிந்துபாடி செந்தமிழ் மக்களுக்கு அவர் இழைத்த துரோகம்!

## தமிழர் தளபதி அமிர் முழக்கம்!



இவ்வாறு தமிழர் தளபதி அமிர்தலிங்கம்அவர்கள்தேர்தல் பிரசாரகூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கூறிஞர். தளபதி அமிர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''சுயேச்சை எனப்படுபவர்கள் தட்டிக்கேட்க ஆளில்லாத காரணத்தால் எந்தக் கொடுமையையும் துணிந்து புரிவார்கள். கட்சி'ஒன்றைச் சேர்ந்தவன் அந்தக் கட்சித் தொண்டர்களின் கேள்விகளுக்குப்பதில் சொல்லியாக வேண்டும்என்று எப்போதும் கட்சிக்கொள்கைகளை மீற

(4ம் பக்கம் பார்க்க)

# பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசு தலைவரின் வெற்றி உறுதி

### கடந்த ஆறு தேர்தல் புள்ளி விபரம் தரும் உண்மை இதுவே

(நமது நிருபர்)

1947ம் ஆண்டு பட்டிருப்புத் தேர்தல் தொகுதி—இன்று கல்முனையுடன் சேர்க்கப்பட்டுள்ள நாய்ப்பட்டிமுனை, சேனைக்குடி, மருதமுனை, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த நிலை 1956ம் ஆண்டுவரையும் தொடர்ந்திருந்ததால், சொற்ப மேலதிக வாக்குகளால் எதிர்மன்ன சிங்கம் இருமுறை நாடாளுமன்றம் வர முடிந்தது,

1960ம் ஆண்டுக்குப்பின் நடந்த மூன்று தேர்தலிலும் எதிர்மன்ன சிங்கம் வெற்றி பெற முடியாதது மட்டுமல்ல பல ஆயிரக்கணக்கான வாக்குகளால் தோல்வியடைந்து வந்தார் என்பது உண்மை.

### நேரடி மோதல்களில் தொகுதி நிலைஎன்ன?

1956

| | |
|---|---|
| எஸ். யூ. எதிர்மனசிங்கம் | 9,528 |
| எஸ். எம். இராசமாணிக்கம் | 9,422 |
| மேலதிகம் | 106 |

குறிப்பு : (தற்சமயம், நாய்ப்பட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது)

1960 பங்குனித் தேர்தல்

| | |
|---|---|
| திரு. இராசமாணிக்கம் | 10,799 |

(3ம் பக்கம் பார்க்க)

## மீலாத் நல் வாழ்த்து

நமது முஸ்லீம் வாசக நேயர்களுக்கும் மற்றும் முஸ்லீம் நண்பர்களுக்கும் 'மீலாத்' நல் வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிருேம்.

—ஆர்.

# கூட்டணியும் யூ.என்.பியும் தமிழினத்தின் விரோதிகள்'

### எட்மண்ட் சமரக்கொடி தாக்கு

''தமிழ் பேசும் மக்களுக்கு மொழி அந்தஸ்து, மற்றும ஜீவாதார உரிமைகள் வழங்கப்படுவதை கூட்டணிக் கட்சிகள் தீவிரமாக எதிர்த்தன. பதவியை பிடிப்பதற்காக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழ் இனத்துவேசத்தையே கருவியாகப் பாவித்தது. 1956—1958ம் ஆண்டுக்காலதமிழ்விரோதக் கலவரத்துக்கும் யூ. என். பி. யுடன் சேர்ந்து காரணமாயிருந்தது. தமிழ் மொழிச் சட்ட (விசேட விதிகள்) மசோதா கொண்டுவரப் பட்டபோது அதைஎதிர்த்து ஒரு இனதுவேஷ வேலை நிறுத்தத்தை 8. 1. 1966ல் கூட்டணிக் கட்சிகள் நடத்தின.'

—புரட்சிவாத சமசமாஜக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் திரு. எட்மண்ட் சமரக்கொடி.

ஈழத்தமிழர் கண்ட போர்க்களங்கள்

# நல்லூர்த் தலைவன் நடத்திய போர்:



தமிழ் வேங்கை நாகநாதன்
தலைநிமிர்ந்து நிற்கின்ருன்!
அமிழ்தச் செந்தமிழ்க் குலத்தின்
அறப்போர் வரிசையிலே
இரும்புத் தமிழ் மனிதன்
எரிமலை போல் நிற்கின்ருன்!
யாழ்ப்பாணக் கச்சேரி
முன்றிலிலே சிறீகாந்த
கொண்டுவந்த அரசவண்டி
குமுறி இரைந்தபடி
நின்று நடுங்க
நிரை நிரையாய் தமிழ்த் தொண்டர்
தடுத்துத் தவம் கிடக்க
தமிழ்ச் சிங்கம் நாகநாதன்
அடித்தால் அடித்துப் பார்
அடித்ததடி முறியுமென்று
காவலர் தடியுடைத்து
காயங்கள் சுமந்தபடி
சாவுக்கும் அஞ்சாத
தமிழ் மகனய் நிற்கின்ருன்!
நல்லூர்த் தமிழ் மண்
நமக்களித்த இவனை நாம்
எல்லாளன் என்போமா?
இராவணன் என்போமா?

## வேட்பாளனும் வாக்காளனும்

யாழ்ப்பாணத்தில்:—

வேட்பாளர்: நான் தமிழரின் உரிமையை இரண்டரை ஆண்டுகளில் பெற்றுத் தருவேன்; இல்லாவிடின் பதவியை இராஜிஞமா செய்வேன்.

வாக்காளர்: இது ஒன்றே உங்களை ஏன் பாராளுமன்றத்துக்கு அனுப்பக்கூடாது என்பதற்கு தகுந்த காரணமாயிற்றே! இரண்டரை வருடங்களுக்கிடையில் கையாலாகாத்தனத்தால் (தப்பித்தவறி உங்கள் வாக்குறுதியை நிறைவேற்ற முன்வந்து) தமிழினத்தை கைகழுவி விட்டு நீங்கள் ஓடிவிட்டால் எமது கதியென்ன?

## நவத்தின் ஆதரவாளர்களுக்கு முகத்தில் கரிப்பூச்சு

கொழும்பு, மே 15

ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடும் சுய ஆட்சிக் கழகத் தலைவர் நவத்துக்கு ஆதரவு தேடி கொழும்பில் கடைத்தெருவெலாம் திரிந்த கோஷ்டியினர் தீவுப் பகுதி தமிழரசு கொழும்புக்கிளை பொருளாளரிடம் ஆதரவு கேட்க சென்ருர்கள்.

அவர்களிடம் பொருளாளர் முகத்திலறைந்தது போல பின்வருமாறு கூறிஞர் ''நான் தமிழரசு கட்சியின் ஆதரவாளன். என்னிடம் நீங்கள் எதுவும் சொல்லவும் வேண்டாம் நான் கேட்கவும் தயார் இல்லை. எனது வோட்டும் எனது குடும்பத்தில் உள்ள அத்தனை வோட்டுக்களும் தமிழரசுக்கட்சியில் போட்டியிடும் கா. பொ. இரத்தினத்துக்கே'

(4ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## நல்ல திட்டம் எது நாட்டோரே சிந்திப்பீர்!

இலங்கையடங்கிலும் தமிழன் உரிமையுடன் பரந்து வாழ வேண்டும் என்று 'பரந்த' நோக்குடன் பேசிவரும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் தமிழ் பேசும் மக்களுக்கான பல்கலைக் கழகம்—தவறு—இந்துக்களுக்கான பல்கலைக் கழகம்—யாழ்ப்பாணத்திலேயே அமைத்திட வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்கிறார்! இந்தப் பிரச்சினை பயன்படுத்தி—யாழ்ப்பாணத் தமிழ் மக்களிடையே மனோபாவத்தை முடுக்கிவிட்டுத் தேர்தலில் வெற்றிபெற்றுவிடலாம் என்று பகல் கனவு காணுகிறார்கள் பொன்னரும் அவரது பொய்யர் கூட்டத்தினரும்.

இலங்கையடங்கிலும் தமிழன் உரிமையுடன் பரந்து வாழ வேண்டும் என்பது பொன்னம்பலத்தின் எண்ணமானால், பாடல் பெற்ற பழம் பெரும் பதியான திருகோணமலையில் மட்டும் தமிழன் ஏன் தனது உரிமையை நிலைநாட்டி தமிழ் பல்கலைக்கழகத்தை நிறுவக் கூடாது என்று கூறுகிறார் பொன்னம்பலம்?

திருமலையில் தமிழர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியமில்லை யென்று அவர் கருதுகிறாரா? மாவட்டசபை ஏற்பட்டிருந்தால் வடக்குக்குள் முடங்கி வாழ வேண்டியேற்பட்டிருக்கும் என ஒப்பாரி வைக்கும் பொன்னம்பலம் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்துக்குள் மட்டுமே முடக்க ஏன் அவதிப்படுகிறார்? குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்ட ஏன் ஆசைப்படுகிறார்?

நாவலர், மழவராயர், இராமநாதன் போன்றவர்களின் சொத்துக்கள் வீணாகிப் போகின்றன என்று திரு. பொன்னம்பலம் கவலைப்படுவாரானால், அச் சொத்துக்களைப் பயன்படுத்தி சைவ கல்வியை போதிக்கும் தனிப்பட்ட நிறுவனங்களை ஏற்படுத்தலாமே!

1947-ம் ஆண்டு காலஞ்சென்ற அருணாசலம் மகாதேவாவை திட்டி அற்பத்தனமாக பிரச்சாரம் செய்த திரு. பொன்னம்பலம் — திரு. மகாதேவா நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தபோதும் எட்டியும் பார்க்காத திரு. பொன்னம்பலம் — தமிழறிஞர் திரு. சு. நடேசபிள்ளையை வடக்கத்தியான் என்றும், வாழைப்பொத்தி என்றும் 1947ம் ஆண்டு வாயில் வந்தபடி தூஷித்த திரு. பொன்னம்பலம்—இன்று இராமநாதன், நடேசபிள்ளை, மகாதேவா ஆகியோருக்காக வடிக்கும் முதலைக் கண்ணீர் கண்டு, அவர்களது குடும்பத்தினர் கூடக் கைகொட்டி சிரிப்பாய்ச் சிரிக்கிறார்கள்.

தமிழர்களுக்கோர் பல்கலைக்கழகத்தை தனது செலவில் அமைத்து நிர்வகிக்க வேண்டியது ஆட்சியாளர் கடமை. அதைத்தரும்படி கோருவது தமிழர் உரிமை.

சைவ மதத்தையும், சமயக் கல்வியையும் வளர்க்கவென்று இந்து மதப் பெரியார்கள் விட்டுச் சென்ற சொத்துக்களை யெல்லாம் அரசாங்கத்துக்கு தாரை வார்க்க ஏன் முயலுகிறார் பொன்னம்பலம்?

காரணம் ஒன்றே ஒன்று தான்;

எப்படியும் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவி விட்டால், அதை வைத்துக்கொண்டு எஞ்சியிருக்கும் மிச்ச சொச்ச காலத்திலும் தமிழ் மக்களை அரசியலில் ஏமாற்றி எம். பியாக வந்துவிடலாமென்பதுதான்;

பொன்னம்பலத்தின் அரசியல் ஆணையிறவுக்குள் அடக்கமானது தானே!

இவரைப் போலவே மற்றொருவர் — கல்குடா தேவநாயகம், மட்டக்களப்பிலே பல்கலைக் கழகம் நிறுவ வேண்டும் என்று கூறிவருகிறார்.

ஏனெனில் இவரது அரசில் வாழ்வு மட்டக்களப்பு மாவட்டத்துள் அடங்கியது.

தமிழரசுக் கட்சியொன்றுதான் பிரதேச, மதவேறுபாடு போன்ற அற்பகுறுகிய நோக்கின்றி இலங்கை யடங்கிலும் வாழும் தமிழினத்தின் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்டு பல ஆண்டுகளுக்கு முன்பே சிந்தித்துதமிழ் பல்கலைக் கழகம் பற்றி தெளிவான முடிவு எடுத்து மக்கள் முன் சமர்ப்பித்திருக்கிறது!

திருமலையிலேயே பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சி விடாப்பிடியாக கோரி நிற்கிறது;

திருகோணமலையை தலைமை ஸ்தானமாகக் கொண்டு அங்கே விஞ்ஞானம், பொறியியல், விவசாய கல்வி கற்பிக்கின்ற நிலையமும்,

மட்டக்களப்பிலே கலைப்பகுதியும்,

யாழ்ப்பாணத்திலே வைத்திய பீடமும்) — நிறுவப்படவேண்டும்.

இதுதான் தமிழரசுக் கட்சி தேசிய உயர் கல்விச் சபையிடம் சமர்ப்பித்துள்ள திட்டம்!

சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கும்—பிரதேச, மத வேறுபாடுகளுக்கும் இடம் தராது முழு இனத்தின் ஒற்றுமையைக் கருதி தீட்டப்பட்டுள்ள திட்டம்!

[illegible]

## தமிழினத்திற்கு இன்று தேவை 'மூளை'யல்ல கட்டுப்பாடான ஓர் இயக்கமே!

இலங்கைத் தமிழினத்தின் அரசியல் வரலாற்றில் இம்முறை நடைபெறும் பொதுத் தேர்தல் ஓர் முக்கிய கட்டமாகும். தமிழினத்தை கூறுபோடும் அரசியல் கொள்கையுள்ள கட்சிகளும் சமூகத்தின் பிற்போக்கு சக்திகளாக விளங்கும் சுயேச்சை வாதிகளும் இத் தேர்தலில் தமிழ் மக்கள் முன் தோன்றியுள்ளனர். எனவே தான் தமிழ் பேசும் மக்கள் சிந்தித்து செயலாற்றவேண்டியதாக இம் முறை நடைபெறும் தேர்தல் இருக்கிறது.

சிங்கள மக்களின் அத்துமீறிய குடியேற்ற இயக்கத்தால் தமிழ் பகுதி நிலங்கள் பறிபோய்கொண்டிருந்கிறது. இந்த நாட்டின் சிங்கள அரசாங்கங்கள் இயற்றும் சட்டங்கள் எல்லாம் எம்மை அழிப்பவையாகவே இருந்துவருகின்றன. அரசியல் வானில் தமிழினத்தை கருமேகங்கள் சூழ்ந்து நிற்பதை தினம் காண்கின்றோம்.

20 வருடங்களாக தமிழினத்தின் நல்வாழ்வுக்கு தமிழரசுக்கட்சியின் அடிப்படை இலட்சியங்களான திட்டங்களே வழிகாட்டுமெனக் கூறிய திரு. நவரெத்தினம் அவர்கள் இப்போது அந்த இலட்சியங்கள் சிறுபிள்ளைத்தனமானவை சமஷ்டி அமைப்பால் தமிழினம் சுதந்திரம் பெற முடியாதெனக் கூறுகின்றார்.

திருவாளர் நவரெத்தினத்தின் அரசியல் கூற்றை ஏற்றுக்கொள்வதா? அல்லது 20 வருடங்களாக தமிழினம் நம்பிக்கை வைத்து ஆதரித்த தமிழரசுக் கட்சியை ஆதரிப்பதா என்ற முடிவை எதிர் வரும் 27ம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தல் மூலம் தீவுத் தொகுதி வாக்காளர்கள் ஏனைய தமிழ் மக்களுக்கு சொல்லி வைக்க கடமைப்பட்டுள்ளார்கள். ஆதலால் தான் இம்முறை தேர்தலில் ஊர்காவற்துறை



தொகுதி இலங்கை, அரசியலில் ஓர் முக்கியத்துவத்தை பெற்று நிற்கிறது;

தமிழரசுக் கட்சியின்இலட்சியத்தில் தளராத நம்பிக்கையுடையவர்களாக, இன மத வேறுபாடுகள் இன்றி இலங்கைத் தமிழர்கள் ஒரு கொடியின் கீழ் உண்மைத் தலைவனான தந்தை செல்வாவின் பின்னால் அணிவகுத்து நிற்கவேண்டும் அப்பொழுதுதான் எமது அரசியலில் நாம் பலம் பெற்றவர்களாக நிற்கமுடியும். எம்மை எதிர்த்து வரும் அநீதிச்சட்டங்களையும் சிங்கள வகுப்பு வெறியையும் நாம் எதிர்த்து நிற்க முடியும். இது கடந்த கால அரசியல் நிகழ்ச்சிகள் எமக்குக் காட்டும் சிறந்த பாடமாகும்.

ஓர் தேசத்தின் உயிர் நாடி அந்த இனத்தில் வாழும் இளைஞர் சமூகத்தை பொறுத்ததே. இலங்கைத் தமிழினத்தின் சுதந்திர வாழ்வும் இளைஞர்களாகிய எமது கையில் தான் இருக்கிறதென்பதை இன்றய இளைஞர் கூட்டம் சிந்தனைக்கு எடுக்க வேண்டுமெனக் கேட்டுகொள்கிறேன். தமிழினத்தின் வாழ்வை இந்த நாட்டில், சுதந்திர வாழ்வாக தமிழின் வாழ்வாக மாற்றியமைக்க எமது உள்ளங்களில் உறுதி எடுத்துக் கொள்வோம். அதுவே தமிழ் தாய்க்கும் தாய் திரு நாட்டுக்கும் இளைஞர் கூட்டம் ஆற்றவேண்டிய அரும்பணியாகும்.

அற்ப சலுகைகள் பதவி ஆசைகள் சுயநல வேட்கை மனப்பான்மைகள் எம்மை

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழரசுப் படைவீரர்வரிசை (10)

### கடமை வீரர் நவரத்தினம்



உறுதியான தோற்றம், தீர்க்கமான பார்வை, கம்பீரமான நடை, நிதானமான பேச்சு விடுதலைத் தலைவனுக்குரிய தாடி—இதுதான் கடமை வீரர் வ. ந. நவரத்தினம்.

'தமிழரசுக்கட்சி வார்த்தெடுத்த வீர இளைஞர்களின் பட்டியலில் திரு. நவரத்தினம் முன்னணியில் திகழ்ந்தார். அதனால்தான் இன்று தென்மராட்சி இளைஞர்களின் இலட்சியத் தலைவனாக மிளிர முடிந்தது.

தமிழர்கள் தனக்குவமையில்லாத சிறப்பு பெற்றுத் திகழவேண்டும், அவர்களின் பாரம்பரியமான பிரதேசம் அவர்களாலேயே ஆளப்படவேண்டும் அதற்கு மொழியுரிமை, குடியுரிமை, சுதந்திரம், சமத்துவம் என்பன பூரணமாக இருக்க வேண்டும் என்ற இலட்சிய வெறி கொண்டவர் நம் நவம், அதற்காக இவர் சத்தியாக்கிரகம் போன்ற இன எழுச்சிப் போர்களில் முன்னின்று போராடினார்.

1956ல் இராணுவக் காட்டுமிராண்டிகள் மூங்கிற் கழியால் குத்தித் தாக்கியதால் மூக்கிலும், முகத்திலும் இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. என்றாலும் அவர் அந்தத் துன்பங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு இன்னமும் தமிழின சுபிட்சத்துக்காகவும், சாவகச்சேரித் தொகுதியின் முன்னேற்றத்துக்காகவே உழைக்கின்றார்.

திரு. வ. ந. நவரத்தினம் அவர்களின் தாடிக்குள்ளே தமிழ் பேசும் சமுதாய போராட்டத்தின் விடுதலை வேட்கையின் உணர்ச்சிக் கொந்தளிப்பின் வரலாறு மறைந்து கிடக்கின்றது. அந்தத் தாடியைக் காணும் போதெல்லாம் சிங்களத் தலைவர்களால் வஞ்சிக்கப்பட்ட, எமது ஜீவாதார உரிமைகளெல்லாம் பிடுங்கப்பட்ட சோக நிலை நிச்சயம் வரவே செய்கிறது;

'சிங்காரத் தமிழின் சீரிளமை மறைக்கப்பட்டிருக்கும் போது என் முகத்தில் மட்டும் சிருங்காரச் சிரிப்பா? என்ற இலட்சிய வெறியை அந்தத் தாடி மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே அவர் தம் இதயத்து ஜீவத்துடிப்பை எமக்கும் ஊட்டிக் கொண்டே இருக்கிறது.

அவரின் பார்வையில் எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம், எல்லாரும் தமிழ் பேசும் மக்கள்தான் அதனால் தான் இவருக்கு நாளுக்கு நாள் ஆதரவு பெருகி பகைவரும் நண்பராகும் மாற்றம் நிகழ்கிறது. இவர் தன் ஆதரவாளர்களுக்குச் செய்த நன்மைகளைவிட மாற்றவர்க்குச் செய்த சேவையே அதிகம்.

சர்வகலாசாலையில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்த போதே தமிழ்ச் சங்கம் நிறுவி தாய் தமிழின் புகழுக்காக உழைத்தவர். தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் தி. மு. க. தலைவர்களுடனும்,வேறு இந்திய அரசியலறிஞர்களுடனும் கலந்துரையாடி இலங்கையின் நெருக்கடி மிக்க பிரச்சினைகளை விளக்கியுள்ளார். அவர்களெல்லோரும் தமிழரசுக்கட்சியின் நல்லெண்ணங்கள் வெற்றிபெற வாழ்த்தியதோடு ''நவத்''தாரின் இலட்சிய வெறியையும் புகழ்ந்துள்ளனர்.

இப்போது திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் மாலைகளை ஏற்பதில்லை. ஆயிரமாயிரம் தமிழர் வேதனை படும்போது எண்ணற்ற இளைஞர்கள் எதிர்காலத் திட்டத்தைச் சரியாகத் தீர்மானிக்க இயலாதிருக்கும் போது என் தோள்கள் மலைபோல் துன்பங்களைத்தான் தாங்க வேண்டும் மாலைகளையல்ல, என்று அவர் கடமையுணர்வோடு சொல்கிறார்.

அதனால்தான் இப்போது இவரின் கூட்டங்களுக்கு மாலைகளுக்குப் பதிலாக டிராக்டர்களும், கார்களும், வண்டிகளும், சைக்கிள்களும் பெருகிக் குவிகின்றன; அவருக்கு மலைபோல் குவியப் போகும் வாக்குகளைப்போல.

நான்கு முறை வெற்றிவாகை சூடி அவராற்றிய பணியை அவரின் அரசியல் எதிரிகள் வெளியே மறைத்தாலும், அவர்களது மனச்சாட்சி ஒருபோதும் மறுக்காது. இது நவரத்தினத்தின் ஐந்தாவது போர்க்களம், தமிழினத்தைக் காட்டிக் கொடுக்க வந்த கோடரிக் காம்புகளை முறித்தெறியும் போர்க்களம்.

போரில் வீரர்கள் தான் வெல்வர். தர்மம் ஜெயிக்கும். ஆமாம் நவத்தாரின் வெற்றி வீரர்களின்—தர்மத்தின் வெற்றிதான்.

## தென்மராட்சியில் என்ன நடக்கிறது?

# சாவகச்சேரியில் காங்கிரசாரின் காலித்தனங்கள்!

## உடையார் திருவிழாவில் வாணம் கொழுத்தும் சடையர் குமாரசாமி

(சாவகச்சேரி சிறப்புநிருபர்)

கூடுவிட்டுக்கூடு பாயும் குமரப் பெருமானும் அவர் தம் குஞ்சுகளும் செய்யும் காலித் தனங்களுக்கும் விஷமத்தனங்களுக்கும் கணக்கு வழக்கே இல்லையா? இந்தியாவில் தேசியக் காங்கிரஸ் என்ற சுதந்திர ஸ்தாபன திலகர், கோகலே மோதிலால், காந்திஜி, இராஜாஜி போன்ற வீரத்தியாகிகளால் உருவாக்கப்பட்டுச் சுதந்திரக் கனலை மூட்டி நாட்டு மக்களை வழி நடத்தியது.

''கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்துத் தன் பொல்லாச் சிறகை. விரித்து ஆடியது போல்'' நமது அரும் பெருந்தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் மார்கட் கிராக்கிக்காக ஓர் 'காங்கிரஸை' உண்டாக்கினர்.

அடே நமக்கு ஒரு காங்கிரஸ் என்ற பெருமையில் விஷயம் தெரியாது மக்கள் மயங்கினர். பெரிய மனிதர்களும் சேர்ந்தனர். இதில் இருந்தல்நாமெல்லாம்தனிப் பெருந தலைவருக்கு ஆமா சாமிகளாயிருக்கலாமேயன்றி வேறு உருப்படியான வழி கிடையாதென ஐ. எக்ஸ். பெரைரா, சேர் மகாதேவா, சு. நடேசபிள்ளை என்பவர்கள் ஆரம்பத்திலேயே காலைவாரிவிட்டனர்.

தனிப்பெருந்தலைவர் லண்டன் சென்றதும் மன்னார்ப் பிரதி நிதியாக இருந்த திரு. தியாகராஜா ஓட்டமும் நடையுமாய் டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் புகுந்தார்.

1947ம் ஆண்டின் பின் தான் வகுத்த கொள்கைக்கே தான் நாமம் போட்டார் தனிப் பெருந் தலைவர். அதனல் செல்வாவும் வன்னியரும் கட்சியின் கருவூலமான கொள்கையுடன் புறப்பட்டனர். வெறும் முட்டைக்கோது காங்கிரஸ் என்ற பேருடன் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

தலைவர் எப்படியோ அதே போலத்தான் சிடர்களும்.

திரு. மகாதேவா அவர்கள் 1947ம் ஆண்டு பாராளுமன்ற வேட்பாளராக நின்று நடத்திய கூட்டங்கள் பலவற்றில் தனிப் பெருந் தலைவர் தாலுபோ தன்னைத் தூக்கி வருமாறு பணித்து தோளிலேறி கூட்டத்துள் நுழைந்து தன்னை ஓர் தனிப் பெரும் அநாகரிகத் தலைவரென நிரூபித்துக் காட்டியவர். தமிழரசுக் கட்சி உதயமான காலத்தில் கைலாய பிள்ளையார் கோயில், முற்றவெளி ஆதியாம் இடங்களில் தானும் தன் கில்லாடிகளுமாய்ச் சேர்ந்து இதையே செய்தனர். தமிழரசார் கூட்டங்களில் விழுந்த கல்லெறிகள் ஒவ்வொன்றும் காங்கிரசின் அத்திவாரக் கல்லுகள்தான். அதுவே தமிழரசுக் கோட்டையைக் கட்ட உதவியது.

குரு எப்படியோ அதை மிஞ்சிய சிடன் திருவாளர் குமாரசுவாமி என்பது ஈழத் தமிழ் மக்கள் எல்லோருக்கும் தெரியும். சில காரியங்களில் குருவையும் மிஞ்சுகிற மீறுகிற வீரமும் அவருக்கு உண்டு, பதினைங்கு வருடம் இருவருக்கும் போதாத காலம்.

சிடன் குமாரசுவாமி 1952ம் ஆண்டு யாழ் முற்றவெளியில் நடந்த ஓர் தேர்தல் கூட்டத்தில் சண்டப்பிரசண்டம் செய்யும்போது மானம் மிக்க வீர இளைஞன் ஒருவன் கேட்ட கேள்விக்கு பதில்சொல்லவக்கற்று அவன் தலையை நோக்கிக் கதிரையை வீசிய விறல் வீரன் அதனல் பல நிமிடங்கள் கூட்டமே நடக்கமுடியாத எதிர்ப்புணர்ச்சி ஏற்பட்டது, நினைவில் நிற்கிறது.

அது மாத்திரமா? 1952ம் ஆண்டு நடந்த தேர்தலில் எதிர் வேட்பாளர் திரு. அருணசலம் ஆசிரியரின் கூட்டத்து மேடையை நாசகாரம் செய்து நிறை குடத்தைத் திருடித் தமக்கெனத் தமிழ்க் காங்கிரஸ் ஓர் இடத்தைப் பெற்றுக்கொண்டதும் நினைவில் நிற்கின்றது, இதன் பிற்பாடும் பல கோழைத்தனமான காரியங்களில் அவரும் அவர் கூட்டமும் நின்று கருமமாற்றியதுண்டு.

பாவம் பரிஸ்டர் சிவானந்தன் சென்ற ஐந்து வருடங்களாக தமிழ் காங்கிரஸ் என்ற விலாசமே சாவகச்சேரியில் இல்லாதிருந்தபோது தனது முயற்சி, பணம் எல்லாவற்றையும்அர்ப்பணித்துக் காங்கிரஸை உருவாக்கி வைத்த சொல்லுக்கு அரிச்சந்திரனும் வில்லுக்கு அருச்சுனனும் பாராளுமன்றத்தில் காலை வாரிவிடுவதில் தனிப் பெரும் தகைமை பெற்றவருமான குமரன், சிவானந்தன் என்னும் கறையான் புற்றெடுக்கக் குடிகொண்ட விஷப் பாம்பாய் உட்புகுந்து கடந்த ஏழெட்டு மாதங்களாகப் படம் விரித்தாடுகிறர்.

கடந்த பதினன்காண்டுகளாக நல்ல ஓய்வைப் பெற்றுத் திருவாசகத்தைத் தேனெழுகிய பின் படித்த மனிதன். திருப்புகழை மனமுருகிய பின் படித்த மனிதன், தேவாரத்தைச் செத்த பிணமே துடிக்கப் படித்த மனிதன், வீட்டிலே வேட்டியே கட்டி, கோட்டிலே கோட்டும் சூட்டும் மாட்டி (சாரம் கட்டுவதில்லை ஏனெனில் நமது ஏழை நெசவாளர் நெய்ததினல்) அறுபத்து மூன்று அரிய பெரிய சேவைகள் செய்ததாகச் சாவகச்சேரி காங்கிரஸ் வாலிபப் பின்னணிகளின் தலைவர் பிரசுரம் செய்திருந்தார்.

இவர் பொதுக்கூட்டங்கள் நடைபெறுங்கால் இடையில் ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து விடுவார். மீண்டும் இவரைத் தேவைப்பட்டால் தேனிலவுக் கூட்டங்களிலிருந்துதான் அழைந்து வருவார்களாம். இவர் மேலும் குமரனின் சேவைகள் சிலவற்றைத் தரவில்லை—அவற்றை நாம் தரவேண்டிய நிலையிலிருக்கின்ருேம் என்பதற்கு வருந்துகின்ருேம்.

### 64. பொங்கல் விழா

வருடா வருடம் நடைபெறும் மாபெரும் விழாவான பொங்கல் விழாவின் பிரமாண்டமான வண்டி ஊர்வலம் கோட்டடியை அண்மியதும் சரசுவதி பூங்கா ஒழுங்கையில் காலிகளை வைத்து நையாண்டி, கல்லெறி, மண்வீச்சு ஆதியாம் திருமுறைகளைச் செயல்படுத்தியது. பாவம் அதனல் ஓர் இளைஞன் இன்னும் ஆசுபத்திரியில் இருக்கின்றன். போலிசாரால் விரட்டியடிக்கப்பட்ட காலிகள் சரசுவதி பூங்காவுக்குள் மறைந்தார்கள்.

### 65. அநுமார் இட்ட தீ

நாவற்குழியில் தமிழரசாரின் கூட்டம் நடைபெற்று முடியுந் தறுவாயிலிருக்கும் போது அங்கு பெருகிவரும் செல்வாக்கைக் கண்டு கிலி கொண்ட சாவகச்சேரியின் கொரில்லா கூட்டம் கடையொன்றுக்குத் தீயிட்டு எமது கட்சியின் மேல் பழியைச் சுமத்த எத்தனித்ததும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்,

### 66. சைக்கிள் ஊர்வலத்தில்

உச்சி வெய்யில் கொளுத்தும் வேளையில், தமிழரசு வாலிப மகா நாட்டுச் சைக்கிள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் மீசாலையை அண்மியதும் திருவாளர் குமாரசுவாமி அதனைப் பார்க்கும் பெரும் பாக்கியத்தைப்பெற்ருர். என்ன இருந்தாலும் எவ்வளவு ஆசையிருந்தாலும் அந்தப்பக்கம் சென்றிருக்கக் கூடாது, உணர்ச்சி மிக்க வாலிபர்கள் வந்த வழியில் அவர்களால் ஏதாவது அசம்பாவிதத்தை உருவாக்கித் தான் அனுதாபத்தைத் தேடிக்கொள்ள முனைந்தார். வாலிபர்கள் கடமை கண்ணியம், கட்டுப்பாடு ஒழுங்கு என்பவற்றைக் கைக்கொண்டதனல் அவர் தந்திரம் வெற்றிபெறவில்லை.

### 67. தாச்சி மறிப்பு
(கிளித்தட்டு விளையாட்டு)

சங்கத்தானை குசவமடத்தடியில் தமிழரசுக் கட்சி ஓர் கூட்டத்தை வைக்க முயன்றது. இதனையறிந்த தேவார திருவாசகமணி அவர்கள் இடங்கொடுக்கஇருந்த ஆசிரியரைக் கையாட்கள் மூலம் மிரட்டித் தடைசெய்தார். அதனல் அதிலிருந்து ஐம்பது யார் தூரத்தில் முன்பு தெரிவு செய்த இடத்திலும் பார்க்கப் பிரமாண்டமான இடம் வீட்டையே பின்னணியாகக் கொண்ட நிலத்தைக் கட்சி நண்பர் கொடுத்தார். இதனைக் கண்டு பொறுக்க முடியாத வேதாந்த சித்தாந்தவித்தகர் தனது அசுர கணங்களை ஏவினர். அதுகள் கூட்டம் நடந்த இடத்துக்கு முன்னல் உள்ள மாமரமும் பூமரமும் கல்லும் மணலும் நிறைந்த காணியிலே விளக்குக் கொழுத்தி வைத்துக் கிளித்தட்டு மறித்தார்கள். அங்கே நரிகள் ஊளையிட்டதால் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் (முன்பு நரியைக் கண்டிராதவர்) அன்று அக்கூட்டத்தில் வாலில்லாத நரிகளைத்தான் கண்டார்கள்.

நரிகள் தாச்சி மறிக்க நவரத்தினம் பழமோடி வெற்றிகரமாகக் கூட்டத்தை நடத்தினர். மோதலை உண்டாக்கித் தியாகத் தழும்புகளைப் பெற்று தமிழரசார் காடையர், கண்ணியம் குறைந்தவர், கொலைகாரர் என்று பேரெடுத்துப் பொதுமக்களின் அநுதாபத்தைப் பெற இருந்த திருக்கேசுவரத்து இரண்டாம் சோமவாரப் பூசையின் முழுப்பலனையும் புகழையும் கட்டிச்செல்வும் புருடோத்தமர் ஏமாற்றமடைந்தார்.

### 68. காங்கிரஸ் காரியாலயத்தில் தீ

உசன் கந்தசுவாமி கோயில் வீதியில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழரசு வேட்பாளரை ஆதரித்து எதிர்க்கட்சியினர் திக்குமுக்காடக்கூடியதாக விளக்கம் கொடுத்துக்கொண்டிருந்தனர். இதனைச் சகிக்க முடியாத திருக்கேசுவரத்து இரண்டாம் சோமவாரக் காலே அரக்கால் உபயகாரரின் அசுரகணங்கள் அக்கினி பகவானுக்கு மகேசுவர பூசை செய்யவிரும்பித்தமது காங்கிரஸ் காரியாலயக் கொட்டிலுக்குத் தீயிட்டனர். அதில் வேடிக்கை என்னவென்ருல் காரியாலயத்துள் இருந்த மேசையும் கதிரைகளும் எரியாவண்ணம் ஒதுக்கப்பட்டிருந்தது தான்.

இதன் பின்பு சும்மாயிருந்தார்களா இந்தத் திருத் தொண்டர்கள். உடனே அநுதாபத்தைச் சம்பாதிக்க விரும்பி தேர்தல் சட்டத்தை மீறி வழக்கமாகக் கையாளும் நேர்மை கெட்ட நெறியில் நின்று தமிழரசுக்காரர் காரியாலயத்துக்குத் தீக் கொளுத்திவிட்டனர்; கடமை வீரனின் கயமைத்தனம் பாரீர்; தமிழரசரின் தறிகெட்டசெயலைப்பாரீர்என்னி திகதியற்ற துண்டுப்பிரசுரத்தைவிட்டு அநுதாபத்துக்குப் பதில் ஆதரவையிழந்து தறிகெட்டு நிற்கின்ருர்கள்.

### 69. உடையாரது திருவிழாவில் சடையர் வாணம்

இந்த விகடப் பழமொழியை எங்கே போனலும் எந்தக் கூட்டத்திலும் திருவாளர் குமாரசுவாமி தானே சொல்லித் தானே உரக்கச் சிரித்துக்கொள்வார். மீசாலைப் புதிய ஸ்டேசனில் திருவாளர் குமாரசுவாமி சடையராக மாறி வாணங் கொழுத்தினர். மீசாலைப் பிரயாணிகள் சங்கம் கடமை வீரரின் முயற்சியால் இருபத்திரண்டு நாட்களில் கட்டி முடிக்கப்பட்ட வசதிகள் நிறைந்த புகைவண்டி நிலயத்தைத் திறந்து வைப்பதற்காகப் போக்குவரத்து மந்திரியை அழைத்தனர்.

முதல் நாள் இங்கிருந்து புகைவண்டியில் சென்று அடுத்தநாட் காலை அமைச்சர் வந்தவிமானத்தில் சடையரும் வந்தார். அமைச்சர் விமானத்தை விட்டு இறங்கி வந்தார். சடையரை விமானப் பணியாளர்கள் வெளியில் வராது தடுத்து வைத்தனர். பாராளுமன்ற அங்கத்தவர் என்ற முறையில் கொண்டு சென்ற ஓர் மாலையையும் அமைச்சருக்கு அணிந்து வரவேற்று அறிமுகம் செய்தார் நவம். பின் விமானத்திலிருந்து விடுபட்ட சடையராம் குமாரர் இறங்கியதும் அவரால் முன்னேற்பாடாக ஒழுங்குபடுத்திய பூமாலைகளுடன் அந்த பூதகணங்கள் குமாரசாமிக்கு ஜே! என்று கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம்செய்து தமக்கு எவ்வளவு செல்வாக்கிருக்கிறதென்பதைக் கனம் அமைச்சருக்குக் காட்டினர். அதற்குப்பின் மாலை இரண்டு மணியளவில் புகைவண்டி நிலயத் திறப்பு விழா நடைபெற்றது. இதில்தான் சடையர் முறையாக அவிட்டுவிட்டார்.

குறிப்பிட்ட நேத்துக்கு அவிட்டுகளையும் சாவகச்சேரியிலிருந்து பூதகணங்களையும் அழைத்துக்கொண்டு ஆறு மோட்டார்களில் சென்ருர், குறிப்பிட்ட நேரத்துக்குப் பிந்தியே மந்திரியவர்கள் பழைய நிலயத்துக்கு வர வேண்டியிருந்ததால் சடையரும் கணங்களும் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் வண்டிகளை மறித்து நின்றனர்.

மந்திரியார் வந்தார். திருக்கூட்டம் சேர்ந்து கொண்டு சொந்தச் செலவில் தயாரித்து ஜீப்பில் கொண்டுசென்ற மாலைகளைக் கணங்களின் கைகள் சடையருக்குச் சூட்டித் தனக்குரிய தகைமை என்ன என்பதை அமைச்சரும் மக்களும் உணரச் செய்துகொண்டார்கள். அழையா விருந்தாளியாகக் கலந்துகொண்டு தமிழரிலும் இப்படி நரம்பறுந்த மனிதர்கள் இருக்கிருர்கள் என்பதை நிரூபித்த முன்னே நாள் அரைமந்திரியாருக்குப் புத்தி இப்படிப் போகிறதென்ருல் அவரின் கூட்டங்கள் எப்படி இருக்கும். திரு: குமாரசுவாமிபேசுவார் என்று தலைவர் கூறியதும் குமாரசுவாமிக்கு ஜே! குமாரசுவாமிக்கு ஜே! என்று தொண்டர்கள் தொண்டை கிழியக் கத்தினர். ஆனல் பேசியவர் சங்கீத ஆசிரியர் குமாரசுவாமி; எப்படிச் சடையரின் வாணம். அவர் பழமொழி அவருக்கே மூக்கறுத்தது.

---

## பட்டிருப்புத் தொகுதியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எதிர்மன்னசிங்கம் 6,517

மேலதிகம் 4,262

1960 ஆடித் தேர்தல்

திரு. இராசமாணிக்கம் 10,948

திரு: எதிர்மன்னசிங்கம் 5,283

மேலதிகம் 5,565

**தொகுதி பிரிந்தபின் மும்முனைப் போட்டியில் பட்டிருப்பின் நிலை**

1965

திரு: இராசமாணிக்கம் 11,270

திரு: எதிர்மன்னசிங்கம் 9,140


திரு: வி. சின்னத்துரை 1,472

மேலதிகம் 2,130

எதிர்மன்ன சிங்கம்கடந்த ஆறு தேர்தலிலும் போட்டியிட்டு இருமுறைகளில் ஒன்பது ஆயிரத்துக்குமேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ளார்; ஆகவே பட்டிருப்புத் தேர்தல் தொகுதியில் யு. என். பி வேட்பாளர் திரு எஸ். தம்பிராசா 10,000 மேற்பட்ட வாக்குகளைப் பெறமுடியாது என்பது உண்மை. பதினையாயிரத்திற்கு மேற்பட்ட வாக்குகளைத் தமிழரசுக் கட்சி பெறும். ஆகவே தமிழரசுத் தலைவர் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அதிகப்படி வாக்குகளால் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

சுதந்திரன்
SUTANTIRAN

அறப்போரில்
நாம் கண்ட
மறக்கமுடியாத
காட்சி




1961ம் ஆண்டு.மார்ச்—ஏப்ரல் மாதங்களில் ஒருநாள். கொதிக்கும் வெய்யில். எதிரே கொடூரமான துப்பாக்கிகளுடன் சிங்கள ஏகாதிபத்தியத்தின் இராணுவப் படைவீரர்கள். இவற்றை அலட்சியப் படுத்து விட்டு தங்களைத் தாங்களே வருத்திக்கொண்டு தமிழ்காக்க—தியாகத் தீயில் குதித்து உரிமைப் போர் நடாத்திக் கொண்டிருந்த உடுவில் வீரர் தருமலிங்கமும் கடமை வீரர் நவமும், அமைதியுடன் பாயில் உட்கார்ந்து உரையாடிய மறக்கமுடியாத மெய்சிலிர்க்கும் காட்சி.

# தமிழைக் காக்க போராடி வரும் ஒரே இயக்கம் தமிழரசுக் கட்சியே

## எம்மை அழித்துவிட யாராலும் முடியாது! சரவணையில் பண்டிதர் இரத்தினம் சங்கநாதம்!

(மண்கும் பான் நிருபர்)

"ஆரம்பத்திலும் சரி இன்றும் சரி நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் தமிழரசுக்கட்சிக்கு ஆதரவு தந்து அல்லும் பகலும் கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள் சரவணையூர் மக்களாவர். இதை எவராலும் மறுக்கமுடியாது. இத்தனை பற்றுள்ள மக்கள் ஒரு தனி கிராமச் சபை கோரினூர்கள். தமிழரசுக்கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் கோரினூர்கள், ஆனால் கடந்த காலங்களில் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை; புதிதாக ஒரு கிராமசபை அமைக்கையில் வருமானம் கூடும். அரசாங்கத்திடமிருந்து மேலதிகபலன்களை எதிர்பார்க்கலாம், இன்னும் எத்தனை யெத்தனையோ பலன்களை இப்பகுதி மக்கள் அனுபவிப்பார்கள் என்பதை கடந்தகால உங்கள் பிரதிநிதி (நவரத்தினம்)அறியாததால் தான் அவர் கவனிக்காமல் விட்டுவிட்டார் போலும் மக்கள் விருப்பப்படி கிராமச் சபையைக் கூட்டுவதன் மூலம் மக்கள் ஒற்றுமையாகவும், வசதியாகவும் இருக்கச் செய்வது தான் ஒரு நல்ல பாராளுமன்ற உறுப்பினரின் கருமமும், திறமையான செயலுமாகும்"



இவ்வாறு தம்மை ஆதரித்து சரவணையில் நடைபெற்ற கூட்டத்தின் போது பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறினூர்.

திரு இரத்தினம் தொடர்ந்து கூறுகையில்:

ஆங்கில அரசாங்கம் இருந்த காலத்தில் தமிழ் அழிக்கப்படவில்லை, சிங்களமும் அழிக்கப்படவில்லை; மொழியைக் கெடுக்க முயலவில்லை ஆனல் சிங்கள அரசாங்கமோ தமிழைச் சிதைக்க முயல்கிறது. மதத்தை அழிக்க் கங்கணம் கட்டுகிறது: 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து போற்றப்படும் தமிழைக் காக்கவல்லதும் தமிழுக்காக பாடுபடும் கட்சியும் தமிழரசுக் கட்சியே யாகும்.

உலக வரலாற்றை நோக்கும்போது மக்கள் உரிமைக்காகப் போராடுகிறூர்கள் இதை அறியாதவர்கள் எங்கள் மக்களையே கூறுபோட்டு சூறையாடும் மாற்றுக் கட்சியினர் தமிழரசு சாதித்ததென்ன என்று கேட்கின்றனர். ஒரு கோப்பைக்கும் ஒரு சுருட்டுக்கும் தமிழனை விலைக்கு வாங்கிவிடலாம் என சிங்கள இனத்தவர்கள் கருதுகிறூர்கள். இதற்குக் காரணம் யார்? இவர்கள் தான். மாற்றுக் கட்சியினரும், சுயேட்சைகளும் தாங்கள் வெல்லாவிட்டாலும் தமிழரசுக்கட்சியை அழிக்கவேண்டும், ஊர்காவற்றுறை தமிழரசுக் கோட்டையாக இருப்பதை ஒழிக்க வேண்டும், என கங்கணம் கட்டுகிறூர்கள்.

எங்களுக்கு உண்மை தெரியும் ஆதலால் மக்களிடத்தும் பாராளுமன்றத்திலும் உண்மை பேசுகிறேம் ஆனல் அவர்கள் உண்மை தெரிந்தாலும் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். அடிமைத் தளையை நீக்குவதற்காகவே போராடிவருகிறோம். நாங்களெல்லோரும் ஒற்றுமையாகி எங்களுக்குள்ளே ஒற்றுமை வருமானல் ஒரு கொடியின் கீழ் இயங்குவோமாயின் போராட்டத்தில் மிகவிரைவில் வெற்றிகிட்டிவிடும்.

கையாலே காசு கொடுத்தும் வாயிலே பானத்தை ஊற்றி மக்களிடத்து ஒற்றுமையைக் குலைக்கும் பேர்வழிகள் இருக்கையில் எமது போராட்டம் தாமதமாகும் ஆனூலும் எங்கள் இயக்கம் என்றும் அழியாது. எங்கள் கட்சியில் உயிர் கொடுந்து வளர்க்கும் தொண்டர்கள் இருக்கிறூர்கள், எங்களுக்கு, எங்கள் கட்சிக்கு உதவிசெய்யும் தொண்டர்கள் பட்டினி கிடந்து, பச்சைத்தண்ணீர் குடித்து கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றனர்.

தீவுப்பகுதி மக்களை ஏமாற்றி விடலாம், காசினூல் அவர்களின் வாக்குகளை வாங்கிவிடலாம், தீவுப்பகுதி தமிழரசுக்கட்சிக் கோட்டையை அழித்துவிடலாம் என மாற்றுக் கட்சியினர்களும் சுயேட்சைகளும் கனவு காண்கின்றனர் இங்கே திரண்டிருக்கும் மக்கள் கூட்டத்தை கண்டாகுதல் அவர்கள் உணரட்டும் என கூறுறிர்.

---

### உடுகம புகழ்பாடிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சுவான்: ஆனல் சுயேச்சையான துரையப்பா எப்போதும் தன் இஷ்டப்படியே ஆடிவருகிறூர். கடிவாளம் இல்லாத குதிரையாக தனது விருப்பத்துக்குக் கூத்தாடி தமிழுணர்ச்சி மிக்க யாழ்ப்பாணத்தின் மானத்தை பல தடவைகள் துணிந்து அவர் நாசம் செய்தார்!

அமைச்சர்களின் தமிழ்ப் பகுதிப் பயணங்களை தமிழர்கள் பகிஷ்கரித்து வந்த வேளையில் ஒருமுறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் இலங்கரெத்தினூவுக்கு தடபுடல் வரவேற்புக் கொடுத்து மானமிக்க யாழ்ப்பாணத் தமிழனின் முகத்தில் கரிபூசினூர் துரைப்பா! அந்த நேரத்தில் அமைச்சர் இலங்கரெத்தினூவை பகிஷ்கரிது தமிழரசுக் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிசாரின் பலத்த தடியடித் தாக்குதலுக்கு ஆளானூர் எங்கள் அமரர் கந்தையா அந்த அடிதான் அமரர் கந்தையா அவர்களின் மரணத்துக்கே காரணமாய் அமைந்தது!

1964ம் ஆண்டு சனவரி மாதம் 1ம் தேதி தமிழ்ப் பிரதேசம் பூராவிலும் சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழர்கள் தீயிட்டுக் கொழுத்தினூர்கள்; அந்த நேரத்தில் யாழ்ப்பாணப் பிரதிநிதியாக இருந்த துரையப்பா ஓடி ஒளித்தார். அத்தோடு நிற்கவில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தை முழுதாக அமுல் நடத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட அரசாங்க அதிபர் நெவில் ஜெயவீராவை ஓடோடிச் சென்று வரவேற்றூர் அல்பிரட் துரையப்பா.

இந்நிகழ்ச்சியைப் பிரபல சிங்களத் தினசரி ஏடான 'தவச' முதற்பக்கத்தில் செய்தியாக வெளியிட்டது. ஜயவீராவுடன் துரையப்பா கைகுலுக்கும் படத்தையும் பிரசுரித்து "யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆட்சிமொழி எதிர்ப்பு தமிழரசு இயக்கம் நடைபெற்ற மறுதினம் கொழும்பிலிருந்து திரும்பி யாழ்ப்பாண எம். பி. திரு. துரையப்பா முதல் முதலாக செய்த நடவடிக்கை அரசாங்க அதிபர் நெவில் ஜெயவீராவை கைகுலுக்கி வரவேற்றதுதான்!" என்று செய்தியும் வெளியிட்டது தவச பத்திரிகை. தமிழுணர்ச்சி அற்ற—மானம் கொஞ்சமும் இல்லாத—வரலாற்றுப் புகழ்மிக்க தமிழினத்துக்குக் களங்கம் கற்பிக்கிற இப்படியான ஒரு மனிதரை யாழ்ப்பணம் தனது பிரதிநிதியாகத் தெரிந்து எடுக்கலாமா?

"இப்போது துரையப்பா புதிய பல்லவி பாட ஆரம்பித்திருக்கிறூர்: நான் சொன்ன கொள்கையைத் தானே இப்போது தமிழரசுக் கட்சியும் சொல்லுகிறது. அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதுதான் வழி என்று நான் அன்றே சொன்னேன்—இன்று தமிழரசுக் கட்சியும் அதைத்தானே சொல்கிறது என்று கூறுகிறூர்—துரையப்பா. ஐயா துரையப்பா—நாங்கள் ஒத்துழைப்போம் என்று யார் சொன்ஞர்கள்? கனவு ஏதும் கண்டீர்களா? அரசாங்கம் எங்களோடு ஒத்துழைக்குமா என்பதுதான் எங்கள் நிலையே தவிர நாங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைப்போம் என்பதற்கு அணுவளவும் எங்கள் கட்சியில் இடமில்லை. அரசாங்கம் எதுவாயினும் எங்கள் கொள்கைக்கு இணங்கி எங்கள் இயக்கத்துக்கு ஒத்துழைத்தால் நாங்கள் அவர்களோடு சமநிலையில் மரியாதையாகப் பழகுவோம். இல்லையென்ருல் ஈழம்பூராவும் ஒத்துழையாமை இயக்கத்தை தீவிரமாக நடத்துவோம். இதுதான் தமிழரசுக் கட்சியின் நிலை. ஆனல் உங்கள் நிலை என்ன? அற்ப சலுகைகளுக்காக அரசாங்கத்தின் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வேலைக்காரனைப்போல ஒத்துழைப்பது—இல்லையா? அந்த விஷயம் எங்கள் சரித்திரத்தில் என்றுமே நடக்காது'

—இவ்வாறு ஆவேசத்தோடு கூறினூர் அமிர்தலிங்கம்.


---

## தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரிக்க எந்தச் சக்தியாலும் முடியாது

### பாண்டிருப்பில் உதுமான் லெப்பை

(பாண்டிருப்பு நிருபர்)

7-5-70 பாண்டிருப்பில் நடைபெற்ற தேர்தல் அலுவலகத் திறப்பு விழா திரு. சா. சுந்தரநாதன் தலைமையில் நடைபெற்றது. இத்திறப்புவிழாவிலே கல்முனைத் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் டாக்டர் ஜனூப் ஆ. உதுமான்லெப்பை அவர்கள் பேசும்போது கூறியதாவது:



வடக்குக் கிழக்குமாகாணங்களில் வாழுகின்ற தமிழர் முஸ்லீம்களை எந்தச் சாதியாலும் பிரித்து விடமுடியாது. இலங்கையில் ஆட்சி பீடமேறுகின்ற எந்தச் சிங்களக் கட்சியும். தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிக்கின்றதே ஒளிய உரிமைகளை வழங்கவில்லை.

ஆனல் இன்று இலங்கையில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துத்தரக் கூடிய கட்சி இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றைத் தவிர வேறு எந்தக் கட்சியுமில்லை.

வடக்குக், கிழக்கு மாகாணங்களிலே திட்டமிட்டுக் குடியேற்றம் நடத்தியவர்களும் தமிழர்களின் மொழியைப் பறித்தவர்களும் இன்று தமிழர்களிடம் வாக்குப் பிச்சை கேட்கின்றூர்கள் பதவி தருகின்றேம், பட்டம் தருகின்றேம், உதவி தருகின்றேம் என்று எம்மை ஏமாற்றி எங்களின் வாக்குரிமைகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏறிவிட நினைக்கின்றூர்கள்.

ஆனூல் கல்முனைத் தொகுதியில் வாழுகின்ற தமிழர்களும் முஸ்லீம்களும் மே மாதம் 27ம் திகதி தக்க பாடம் கற்பிப்பார்கள்.

பட்டிருப்புத் தொகுதியில் பிரதமர் டட்லிசேனநாயக்கா கூறினூர் — இம்முறை தமிழரசுக் கட்சி இருபது ஸ்தானங்கள் வென்று பாராளுமன்றம் சென்ருலும் எந்தவித நன்மையும் கிடைக்காதென்று. நான் கூறுகின்றேன் 1965ம்ஆண்டு பிரதமர் டட்லி என்று நாமகரணம் சூட்டவைத்தது தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழரசுக்கட்சிதான் என்பதைப் பிரதமர் மறந்து விட்டாரென்ருல் இது ஒரு நன்றி கெட்டதனமல்லவா?

---

### நவத்தின் ஆதரவாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஆணித்தரமாக கூறி அவர்களை உடனே விரட்டிவிட்டார். அவர்கள் தலைகுனிந்து வெட்கித்து மறு கடைகளுக்கு சென்ருர்கள் எங்கு பார்த்தாலும் இதே பதில் தான் அவர்களுக்கு கிடைத்தது. இதனூல் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு தமது கோரிக்கைக்கு இவர்கள். ஒருவரும் சரிவரமாட்டார்கள் என்று அவரவரே கலைந்துசென்றுவிட்டார்கள்.

---

### தமிழினத்திற்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு தூர ஓடட்டும். புதிய வாழ்வு காண உயர்ந்த எண்ணமும் தியாகமும் உள்ள மக்களாக இளைஞர்களாக நாம் இப் புவியில் உலாவி வருவோம். எமது தொகுதி இளைஞர்களுக்கு மட்டும் இதை நான் கூறவில்லை—தமிழரசுக் கட்சி போட்டியிடும் எல்லாத் தொகுதி இளைஞர்களையுமே இந்த இலட்சிய வாழ்வுக்கு உழைக்க தமிழரசை வெற்றி காணச்செய்ய பணிபுரியுமாறு வாலிப முன்னணியின் சார்பில் வேண்டுகின்றேன்.

12. 5. 70. ல் ஊர்காவற்துறை காம் வீதி சனசமூக முன்றலில் நடைபெற்ற த. சு. க. தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வா. மு. பொதுச்செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு ஆற்றிய உரை

---

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்; கோவை மகேசன்,